

முத்தாயம்மாள் பாலிடெக்னிக் கல்லூரியின் 34வது முப்பெரும் விழாவில் சிறப்பிடம் பிடித்த மாணவ மாணவிகளுக்கு சிறப்பு விருந்தினர்கள் சக்கரையப்பன் மற்றும் தாளாளர் ராமசாமி பரிசளித்தனர்.

# ராசிபுரம் முத்தாயம்மாள் பாலிடெக்னிக் கல்லூரியில் 34 வது முப்பெரும் விழா

ராசிபுரம், பிப். 13-

ராசிபுரம், முத்தாயம்மாள் பாலிடெக்னிக் கல்லூரியில்34-ம்ஆண்டு விழா, விளையாட்டுவிழா, விடுதிவிழா என முப்பெரும் விழா கல்லூரி வளாகத்தில் நடைபெற்றது. ஆங்கிலத்துறை முதுநிலைவிரிவுரையாளர் குணவதி வரவேற்றார்.

அறக்கட்டளையின் பொருளாளர்பிரேம்குமார் தலைமைவகித்தார். பாலிடெக்னிக்கல்லூரிமுதல்வர் விஜயகுமார் கல்லூரியின் செயல்பாடுகள் மற்றும்ஆண்டுஅறிக்கை வாசித்தார்.

விழாவில் முத்தாயம்மாள் கல்வி அறக்கட்டளையின் தாளாளர் ராமசாமி மற்றும் சக்தி ஆட்டோகாம்போனென்ட் நிறுவனத்தின் டெக்னிக்கல்பிரிவுதுணைத்தலைவர்சக்கரையப்பன் ஆகியோர்சிறப்புவிருந்தினர்களாக கலந்து கொண்டனர்.

விழாவில் சிறப்பு விருந்தினர்சக்கரையப்பன் பேசுகையில்பணியிடங்களில்தான்பெற்றஅனுபவங்களைபின்பற்றியதால் உயர்ந்த நிலைக்கு வர முடிந்தது என்றார். இக்கல்லூரியில்பின்பற்றப்படும்ஒழுக்கத்துடன் கூடிய கல்வி, தொழிற்சாலைகளிலும் முக்கியத்துவம் பெறுகிறது. மேலும்கடந்தஆண்டுகளில் ஏற்பட்டுள்ள தகவல் தொடர்புமற்றும்பொறியியல்துறையின்வளர்ச்சிகளைஎடுத்துக்கூறிசெய்முறைபயிற்சியின்முக்கியத்துவத்தை மாணவர்களிடம் விளக்கினார்.

விழாவில் கடந்த ஏப்ரல்மற்றும்அக்டோபர் மாதம் நடைபெற்ற வாரியத்தேர்வில் 700க்கு 700மதிப்பெண்கள்பெற்று மாநிலஅளவில்சாதனை படைத்த 09 மாணவ, மாணவியர்களுக்குதங்க நாணயங்கள் மற்றும் சிறப்புபரிசுகேடயங்கள் வழங்கப்பட்டது.

மேலும் சிறப்பிடம் பெற்ற அனைத்து துறை மாணவ மாணவியர்களுக்கும், உறுதுணையாக இருந்தஆசிரியஆசிரியைகளுக்கும்கல்லூரிதாளாளர் ராமசாமி, சிறப்புவிருந்தினர் சக்கரையப்பன் மற்றும்பொருளாளர்பிரேம்குமார்ஆகியோர்41கிராம் தங்கநாணயங்களையும், பரிசுகளையும் வழங்கி பாராட்டினர். கல்லூரி அறக்கட்டளையின்தாளாளர்ராமசாமி பேசுகையில் மாணவ, மாணவியர்களின் ஒழுக்கம்கட்டுப்பாடுடன் கூடியகல்விதான்கல்லூரியின் சொத்து என்று கூறி படிப்பின் முக்கியத்துவத்தை விளக்கினார். மாணவ மாணவியர்கள் பெற்றோருக்கும்மற்றும் நாட்டிற்கும் பெருமை தேடித்தர வேண்டும் என்றார்.

மாநிலமற்றும்சேலம் மண்டலபாலிடெக்னிக் கல்லூரிகளுக்கிடையேயானவிளையாட்டுப்போட்டிகளில் பங்கு பெற்று முதல்மற்றும்இரண்டாம் இடங்களை பிடித்த மாணவமாணவியர்களை முத்தாயம்மாள் கல்வி அறக்கட்டளையின்பொருளாளர் பிரேம்குமார்மற்றும்நிர்வாகஉறுப்பினர் விஜய்குமார் ஆகியோர் பாராட்டி பரிசளித்தனர். முடிவில்முதலாமாண்டு துறைத் தலைவர் சந்திரசேகர் நன்றி கூறினார்.

ாணங்களும்

